**நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்திற்கான - 2018**

---

நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி செயற்திட்டத்தின் 2018 சனவரி 26 முதல் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதற் கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 சனவரி 26 ஆம் திகதிய பீ 4910 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை முற்பணத்தின் II ஆம் உறுப்புரையின் 2.5(சீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை முற்பணத்தின் பிரகாரம், தற்போதைய தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சும் நிதி மற்றும் ஊடக அமைச்சின் கீழ் இயங்கிய தேசிய திட்டமிடல் திணைக்களம் செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வள மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கடன் வழங்கும் முகவரகத்தின் நிதி உதவியின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்திட்டத்தின் தயாரிப்பு நடவடிக்கைகளிற்காக உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் முற்பணத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4.00 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 609.55 மில்லியனானதுடன் மொத்தத் தொகையும் மீள்நிர்மாண மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 சனவரி 26 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2020 சனவரி 20 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையைத் தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| உள்ளூர் அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட உசாவுகைக் கொடுப்பனவுகள் தனியாள் ஊதியத்தின் கீழ் தவறுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 1.90 | குறைத்துக் கூறல். உசாவுகை மீதான கிரயம் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | அடுத்து வரும் ஆண்டில் கணக்கீட்டுத் தவறுகள் சீராக்கப்படும். | கணக்கீட்டுப் பதிவுகள் மீதான கட்டுப்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் அமுலாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் 09 கடன் வழங்கும் செயற்திட்டத்தின் கீழான தயாரிப்பு நடவடிக்கைக்காக நிதி உதவி வழங்குவதே செயற்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவதுடன் இதில் 03 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டு அமுலாக்கப்பட்டிருந்தன. வழங்கப்பட்ட விளக்கங்களின் படி, எதிர்பார்க்கப்பட்ட ஏனைய 04 கடன் வழங்கும் செயற்திட்டங்கள் பொருண்மையாக்கப்பட்டு விளக்கமான வடிவமைப்புகள் மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்தன. அரசாங்க முன்னுரிமைப்படுத்தல்களின் மாற்றங்கள் காரணமாக ஏனைய 02 செயற்திட்டங்களின் தயாரிப்பு நடவடிக்கைகள் தாமதமாக்கப்பட்டுள்ளன.

### 3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் முடிவுற்ற முதற் கணக்காண்டுக் காலப்பகுதியின் போதான ரூபா 609.55 மில்லியன் ஒதுக்கீட்டுத் தொகையில் 8.31 சதவீதமான ரூபா 25.71 மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் எய்தப்படவில்லை. | நிபுணரால் மேற்கொள்ளப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகள் மற்றும் அவற்றிற்கான செலவினங்களும் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு வசதி நிதியத்தில் இருந்து ஏற்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பயன்பாட்டைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |